# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## தொலைநிலைக்கல்வித் தேர்வுப்பிரிவு

**முனைவர் தி. சிவகுமார்**

கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)

நாள். 08.06.2021

**சுற்றறிக்கை**

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்கக வாயிலாகச் சான்றிதழ், பட்டயம், இளநிலை, முதுநிலை பயிலும் மாணவர்களுக்கான திசம்பர் 2020 நாட்காட்டியாண்டு தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்டு கொரோனா ஊரடங்கு காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது திசம்பர் 2020 தேர்வுகளோடு மே 2021 கல்வியாண்டு பயிலும் மாணவர்களுக்கும் சேர்த்துத் தேர்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே தேர்வு எழுத விரும்புவோர் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள முகவரி tamiluniversity.ac.in உள்ள தங்கள் பாடத்திற்குரிய விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து, உரிய கட்டணம் செலுத்தி முறையாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வுக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க இறுதி நாள் 25.06.2021

ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. கொரோனா தொற்றுக் காலமாக இருப்பதால் மாணவர்கள் கட்டணம் செலுத்தப் பல்கலைக்கழகத்திற்கு நேரில் வரவேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தேர்வுக் கட்டணத்தை இணையவழியாகச் செலுத்தி விண்ணப்பிக்குமாறும், உரிய காலத்தில் விண்ணப்பத்தினை அனுப்பித் தேர்வினை எழுதுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வுக் கால அட்டவணை பின்னர் வெளியிடப்படும்.

கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்(பொ)